


## தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக டெல்லி அடங்கும்வரை அடிக்க வேண்டும்!

## திமிரெடுத்த பா.ஜ.க. அடங்கியே ஆக வேண்டும்!

# தமிழ்நாட்டுக்குத் துரோகம் செய்யும் பழனிசாமி பா.ஜ.க.வில் சேர்ந்து விடலாம்!

### தருமபுரி – தேர்தல் பிரச்சாரப் பிரம்மாண்டப் பொதுக்கூட்டத்தில்

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் தாக்கு!

தருமபுரி, ஏப்.17 –

**‘தொகுதி மறுசீரமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து வீடுகளில் கருப்புக் கொடி ஏற்ற வேண்டும்’ எனவும், ‘டெல்லி அடங்கும்வரை நாம் அடிக்க வேண்டும்! அடிக்கும் அடியில் திமிரெடுத்த பா.ஜ.க. அடங்கியே ஆக வேண்டும்’ என்றும், ‘எந்தப் பிரச்சினையிலும் தமிழ்நாட்டுக்காகக் குரல் கொடுக்காத பழனிசாமி கட்சியைக் கலைத்துவிட்டு நேரடியாகப் பா.ஜ.க.வில் ஐக்கியமாகிவிடலாம்’ என்றும் தருமபுரி பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.04.2026) தருமபுரியில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக் கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு :-**

வரலாற்றுச் சிறப்பும் – இயற்கை எழிலும் நிறைந்த தருமபுரிக்கு நான் வந்திருக்கிறேன்! தருமபுரி என்றாலே, வாழ்க்கையில் மறக்க முடியாத ஊர்! தமிழ்நாட்டுப் பெண்கள் என்னை அண்ணனாகப் பாசத்தோடு அழைக்கிறார்கள் என்றால், அதற்கு அடித்தளம் அமைத்த ஊர்தான், இந்த மாவட்டம்!

**மகளிர் சுய உதவிக்குழுக்கள் தொடங்கப்பட்ட ஊர் தருமபுரி!**

ஏனென்றால், நான் உள்ளாட்சித் துறை அமைச்சராக – துணை முதலமைச்சராக இருந்தபோது, மகளிர் சுய உதவிக்குழுவினருக்குப் பல மணிநேரம் மேடையில் நின்றபடியே சுழல்நிதி வழங்கி இருக்கிறேன். அந்த மகளிர் சுய உதவிக்குழுக்களை 1989-இல் தலைவர் கலைஞர் இந்த தருமபுரியில்தான் தொடங்கி வைத்தார்கள்!


இப்போது நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், மகளிர் மேம்பாட்டுக்கான புரட்சியாக மாறியிருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கான விதையையும், இதே தருமபுரி மண்ணில்தான் விதைத்தோம்! மகளிர் உரிமைத்தொகை விண்ணப்பங்களைப் பதிவு செய்வதற்கான முகாம்களைத் தொடங்கி வைக்க இதே தருமபுரிக்குத்தான் நான் வந்தேன்.

கோடிக்கணக்கான மக்களின் குறைகளுக்குத் தீர்வு கண்ட திட்டம்தான், “மக்களுடன் முதல்வர்” திட்டம்! அந்தத் திட்டத்தை ஊரகப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தி, நான் தொடங்கி வைத்ததும், இதே தருமபுரியில்தான்!

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் அதியமான்கோட்டைக்கு வந்தபோது, விவசாயப் பெருங்குடி மக்கள், இணையவழியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் விண்ணப்பித்து, ஒரே நாளில் பயிர்க்கடன் பெறும் நடைமுறையை, முன்னோடித் திட்டமாக தொடங்கி வைத்தேன்.

**தி.மு.க.வின் வலிமையை இன்னும் பல மடங்கு உயர்த்துங்கள்!**

இப்படி புதிய சாதனைத் திட்டங்களைத் தொடங்குவதற்கான இடமாக இருக்கும்



தருமபுரிக்கு, தமிழ்நாட்டுக்குத் துரோகம் செய்யும் கூட்டத்தை விரட்டியடியுங்கள் என்று நான் கேட்க வந்திருக்கிறேன். தமிழ்நாட்டுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகத் தமிழ்நாடே ஓரணியில் அணி திரள வேண்டும் என்று கேட்க வந்திருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் வலிமையை இன்னும் பல மடங்கு உயர்த்த உங்கள் ஆதரவைக் கேட்டு வந்திருக்கிறேன்!

தருமபுரி என்றாலே, அது திராவிட முன்னேற்றக் கழகம்தான்! அந்த அளவுக்கு ஏராளமான திட்டங்கள் நம்முடைய ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது!

அதற்கு எடுத்துக்காட்டுதான், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்!

தருமபுரி – கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க, 2008-இல் தலைவர் கலைஞர் உருவாக்கிய அந்தத் திட்டம். அன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த என்னுடைய மேற்பார்வையில்தான் நடந்தது!

**பாதுகாப்பான குடிநீரை இந்த மாவட்டங்களுக்கு வழங்கியவன் நான்!**

மூன்று நகராட்சிகள் – 16 பேரூராட்சிகள் – 7 ஆயிரத்து 639 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் மக்களுக்குக் குடிநீர் வழங்கிய அந்தத் திட்டத்தை, ஆயிரத்து தொள்ளாயிரத்து 29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜப்பான் நாட்டு நிதியுதவியோடு செயல்படுத்தி, பாதுகாப்பான குடிநீரை உங்களுக்கு வழங்கியவன்தான், உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கும் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்!

இந்தத் திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகளையும் இப்போது நாம் செய்து கொண்டிருக்கிறோம்! இந்தப் பணிகள் எல்லாம் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு, தருமபுரியின் வளர்ச்சிப் பயணம் தொடர வேண்டும். அதற்காக, வேட்பாளர்களை உங்கள் அனுமதியோடு அறிமுகப்படுத்தலாமா?

**வெற்றி வேட்பாளர்கள்!**

முதலில், பாப்பிரெட்டிபட்டி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் பழனியப்பன் அவர்கள். முன்னாள் அமைச்சர். முனைவர் பட்டம் பெற்றவர். நம்முடைய கழகத்தில் இணைந்ததிலிருந்து தருமபுரி மேற்கு மாவட்டப் பொறுப்பாளராகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். ஏற்கனவே, மொரப்பூர் மற்றும் பாப்பிரெட்டிபட்டி சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றித் தன்னுடைய தொகுதி மக்களுக்காக ஏராளமான திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார். அவருக்கு, பாப்பிரெட்டிபட்டி தொகுதி மக்கள் உதயசூரியன் சின்னத்தில் வாக்கினை வழங்கிட வேண்டும்.

அடுத்து, பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் டாக்டர் செந்தில் குமார் அவர்கள். மருத்துவராக இருந்து, மக்கள் பணியாற்றியவர். இந்த தருமபுரி மாவட்டம் உருவாகக் காரணமாக இருந்த முன்னாள் எம்.எல்.ஏ. டி.என்.வடிவேலு அவர்களின் பேரன். ஏற்கனவே, தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து சிறப்பாகப் பணியாற்றியவர். நம்முடைய கழகத்தின் அயலக அணி இணைச் செயலாளர். துடிப்பான இளைஞரான இவருக்கு, பாலக்கோடு தொகுதி மக்கள் உதயசூரியன் சின்னத்தில் வாக்கினை வழங்கி வெற்றி பெற வைக்க வேண்டும்.

அடுத்து, அரூர் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் சண்முகம் அவர்கள். பத்தாண்டு காலம் தீர்த்தமலை ஊராட்சி மன்றத் தலைவராக இருந்து, மிகச் சிறப்பாகப் பணியாற்றியவர். கழகத்தின் அயலக அணியின் தருமபுரி மாவட்டத் துணைத் தலைவராக இருக்கிறார். ஏற்கனவே, அரூர் பகுதி கிளைச் செயலாளராகவும் – ஒன்றிய பொருளாளராகவும் இருந்து சிறப்பாகச் செயல்பட்டவர். அவருக்கு, அரூர் தொகுதி மக்கள் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற வைக்க வேண்டும்.

அடுத்து, தருமபுரி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் தே.மு.தி.க.வைச் சேர்ந்த டாக்டர் வி. இளங்கோவன் அவர்கள். நினைவில் வாழும் என்னுடைய ஆருயிர் சகோதரர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் அன்பைப் பெற்றவர். தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் அவைத் தலைவர். மருத்துவராக இருந்து, மக்கள் பணியாற்ற வருகிறார். 2006-ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் நகராட்சித் தலைவராகி மக்களுக்கு பணியாற்றியவர். தே.மு.தி.க.வின் பொதுச்செயலாளர் அன்புக்குரிய சகோதரி பிரேமலதா விஜயகாந்த் அவர்களால் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள இவருக்கு, நீங்கள் எல்லாம் ‘முரசு’ சின்னத்தில் வாக்களித்துப் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்.

**நமது வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்யுங்கள்!**

அடுத்து, பென்னாகரம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் ஜி.கே.எம். தமிழ்க்குமரன் அவர்கள். என்னுடைய பெருமதிப்பிற்குரிய சமூக நீதிப் போராளி மருத்துவர் அய்யா ராமதாசு அவர்களின் நம்பிக்கைக்குரிய வலது கரமான அண்ணன் ஜி.கே. மணி அவர்களின் அருமை மகன்தான் ஜி.கே.எம். தமிழ்க்குமரன் அவர்கள். அவருக்கு, ‘கை’ சின்னத்தில் பென்னாகரம் தொகுதி மக்கள் வாக்கினை வழங்கி வெற்றி பெற வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே நிற்கும் வேட்பாளர்களின் வெற்றி உறுதிதானே? நன்றி! வேட்பாளர்கள் அமரலாம்! உங்கள் வெற்றி உறுதியாகிவிட்டது!

> **“நமக்கு ஆபத்தை ஏற்படுத்தும் தொகுதி மறுசீரமைப்புத் திட்டத்திற்கு எதிராக நாடாளுமன்றத்தில் நமது குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும்!”**

பொதுவாக என்ன சொல்வார்கள் என்றால், “கோடு போட்டால் ரோடு போடுவோம்” என்று சொல்வார்கள்... ஆனால், நம்முடைய திராவிட மாடலில், இந்தியாவுக்கே வழிகாட்டும் ரோட்டை நாம் போட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தப் பாதையில், முன்னோக்கிப் போகலாம் என்று ஒட்டுமொத்த இந்தியாவையும் அழைக்கிறோம். இது, பா.ஜ.க.வுக்குப் பிடிக்கவில்லை!

ஏனென்றால், இந்தியா வளர்ந்துவிட்டால், ஆர்.எஸ்.எஸ். உருவாக்க நினைக்கும் 200 ஆண்டுகாலப் பிற்போக்குச் சமூகத்தை உருவாக்க முடியாது! அந்தச் சமுதாயம் வந்தால்தான், மக்களை மயக்கி, உழைப்பைச் சுரண்டி ஒரு சிலர் மட்டும் வளமாக வாழலாம்.

தொடர்ச்சி 4 –ஆம் பக்கம்